# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 17.08.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 16540/SCIC/2024**

Thiru. PUVIYARASAN — மேல்முறையீட்டாளர்
No.10/203, Pallipatti Mottur
PALLIPATTI POST - 636 458.
METTUR TALUK, SALEM DISTRICT.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ...... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் மேற்கு - 636 012.

**ஆணை**

1. இவ்வழக்கு ஏற்கனவே ஆணையத்தால் 16/04/2026 அன்று விசாரிக்கப்பட்டு 20/04/2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> “இவ்வழக்கின் மீது ஆணையத்தின் (16/04/2026) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர், சேலம் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.கு.தனசேகரன், நிருவாக சார்பதிவாளர், சேலம் (மேற்கு), அவர்கள் ஆஜரானார். **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 13/09/2023 தேதியிட்ட மனுவினை, மின்னஞ்சல் வாயிலாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்களுக்கும் அனுப்பியுள்தோடு, சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை 18/10/2023 தேதியிட்டு அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. அம்மனுவிற்கு மாவட்டப் பதிவாளர், சேலம் (மேற்கு) அவர்கள் 13/11/2025 தேதியிட்டு இனம் வாரியான**

**பதில்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளார். மனுதாரரும் அதனை பெற்றுக் கொண்டுள்ளதோடு, இன்றைய விசாரணையின் போது பிரதானமாக, மிகவும் காலதாமதாக தனக்கு பதில் கிடைக்கப் பெற்றுள்ளதாகப் புகார் தெரிவித்தார். மனுதாரரின் புகாரினை ஆணையம் ஏற்றுக்கொண்டு, பொது அதிகார அமைப்பு / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேலம் (மேற்கு) மனுதாரருக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐயாயிரம் மட்டும்) இழப்பீடு வழங்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பித்திருந்ததோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை 14/05/2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், சேலம் (மேற்கு) அவர்கள் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருந்தது."**

3. அதனைத் தொடர்ந்து இன்று (20/04/2026) ஆணையத்தின் முன் திருமதி.வெ.ராணி, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)/பொதுத் தகவல் அலுவலர், சேலம் (மேற்கு) அவர்கள் ஆஜராகி, தனது நெருங்கிய உறவினர் திடீரென்று காலமாகிவிட்டபடியால் 16/04/2026 தேதிய ஆணையத்தின் விசாரணையின் போது தன்னால் ஆஜராக இயலவில்லை எனத் தெரிவித்து, அது தொடர்பான கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததோடு, அதற்காக தன்னை மன்னிக்குமாறும் ஆணையத்திடம் கோரினார். பொதுத் தகவல் அலுவலரின் கோரிக்கையினை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. மேலும், மனுதாரர் 17/04/2026 தேதியிட்டு ஆணையத்திற்கு முகவரியிட்ட கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அக்கடிதத்தில்

> "*எனது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவினை தவறான பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியதாலும், மேற்படி எனது மனு குறித்து முழுமையாக தகவல்கள் கிடைக்கப் பெற்ற நிலையிலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நான் பல்வேறு மனுக்கள் அனுப்பிய நிலையில், நேரடி காணொளி மூலம் விசாரணையின் போது ஆணையர் அவர்களிடம் பதற்றத்தில் தவறான வாக்குமூலம் தெரிவித்தேன் எனவும், மேற்படி தவறுக்கு வருந்துகிறேன். எனவே ஐயா அவர்கள் எனது தவறினை மன்னித்து, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)/ பொது தகவல் அலுவலருக்கு விதித்துள்ள ரூ.25,000/- அபராத தொகையை ரத்து செய்யுமாறும் எனக்கு எவ்வித நஷ்ட ஈடு தொகையும் வேண்டாம் எனவும், பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தேவை ஏற்படின் மேற்படி எனது அறிக்கையினை ஆணையர் அவர்களிடம் நேரில் தெரிவிக்கவும் தயாராக உள்ளேன் எனவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்* " எனக் குறிப்பிட்டுள்ளார்.

**4. மனுதாரரின் முறையீட்டினை ஆணையம் பதிவு செய்வதோடு, பொது அதிகார அமைப்பு இழப்பீடு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐயாயிரம் மட்டும்) வழங்க வேண்டும் என்ற உத்தரவினை, ஆணையம் இரத்து செய்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல் முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

2. இவ்வழக்கின் மீது ஏற்கனவே 20/04/2026 அன்று ஆணையம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மேற்கண்ட உத்தரவினை பிறப்பித்துள்ளது. இந்நிலையில், காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம், சென்னை அவர்களின் 25/06/2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் 22/05/2026 தேதியிட்ட மனு அனுப்பப்பட்டிருந்தது. அம்மனுவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> *“நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.SA 16540/SCIC/2024 தொடர்பாக இம்மனுவை பணிவுடன் அளிக்கிறேன். மேற்கண்ட வழக்கில் 16/04/2026 அன்று காணொளி வாயிலாக விசாரணை நடைபெற்றது. அந்த விசாரணையின் அடிப்படையில் தகவல் ஆணையம் உத்தரவு வழங்க வேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் பின்னர் 20/04/2026 அன்று பதிவேற்றம் செய்யப்பட்ட உத்தரவில் “**மனுதாரர் 17/04/2026 அன்று ஆணையத்திற்கு கடிதம் அனுப்பி, தமக்கு இழப்பீடு தேவையில்லை என்றும் வழக்கை தொடர விருப்பமில்லை என்றும் தெரிவித்தார்**” என்று குறிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு மிக முக்கியமாக தெரிவிப்பது என்னவென்றால், நான் எந்தவொரு கடிதத்தையும், சமரச மனுவையும் அல்லது வழக்கை வாபஸ் பெறும் மனுவையும் தகவல் ஆணையத்திற்கு அனுப்பவில்லை. மேலும், எந்த உரிய அதிகாரியின் முன்னிலையிலும் அல்லது சட்டப்படி Inward Register பதிவின் மூலமாகவும் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை உறுதியாக தெரிவிக்கிறேன். ”*

3. மேற்கண்ட 22/05/2026 தேதியிட்ட மனுதாரரின் மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு ஆணையத்தால் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்ததன் பேரில் இன்றைய (17/08/2026) விசாரணையின் போது மனுதாரர் திரு.புவியரசன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.வெ.ராணி, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), சேலம் (மேற்கு) பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜரானார். இன்றைய விசாரணையின் போதும் மனுதாரர் ஏற்கனவே தெரிவித்ததை, அதாவது 17/04/2026 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், ஆணையத்திடம் சமர்ப்பித்தது போன்று எவ்வித கடிதமும், தான் அளிக்கவில்லை என வலியுறுத்தியதோடு, ஏற்கனவே 16/04/2026 தேதியிட்டு ஆணையம் பிறப்பித்த உத்தரவின்படி ரூ.25,000/- இழப்பீட்டினை பொது அதிகார அமைப்பு அளிக்க உத்தரவிடுவதோடு, தான் அளிக்காத ஒரு கடிதத்தை தான் அளித்ததாகக் கூறி தவறான கடிதத்தை ஆணையத்திற்கு சமர்ப்பித்த பொது அதிகார அமைப்பின் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரினார்.

4. ஏற்கனவே ஆணையத்தில் 16/04/2026 விசாரணையில் ரூ.25,000/- இழப்பீட்டினை மனுதாரருக்கு வழங்க பொது அதிகார அமைப்பிற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.வெ.ராணி, பொதுத் தகவல் அலுவலர் (நிர்வாகம்), சேலம் (மேற்கு) 20/04/2026 அன்று ஆணையத்திற்கு வந்து மனுதாரரின் மேற்கூறியவாறான 17/04/2026 தேதியிட்ட கடிதத்தினை அளித்ததன் பேரில், பொது அதிகார அமைப்பு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) இழப்பீடு வழங்க வேண்டும் என்ற உத்தரவு ஆணையத்தால் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், இன்றைய விசாரணையின் போது மனுதாரர், தான் 17/04/2026 தேதியிட்டு எவ்வித கடிதத்தினையும் அளிக்கவில்லை என்று தெரிவித்தார். இது குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு 22/05/2026 அன்று மனு அளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

5. **எனவே, பொது அதிகார அமைப்பு/ மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேலம் (மேற்கு) பதிவு மாவட்டம், மனுதாரருக்கு இழப்பீடு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஐ மனுதாரருக்கு 30/09/2026-க்குள் அளிப்பதோடு, அதற்கான சான்றினை ஆணையத்தில் 30/09/2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

6. **மனுதாரர் தெரிவித்துள்ள புகாரான “17/04/2026 தேதியிட்டு இழப்பீடு ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐயாயிரம் மட்டும்) ஐ ரத்து செய்ய வேண்டுமென்று தெரிவித்து” தான்**

**எவ்வித கடிதமும் அளிக்கவில்லை என்பது குறித்தும், தவறான கடிதத்தை பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார் என்பது குறித்து ஆணையம், தகுதி வாய்ந்த அலுவலரைக் கொண்டு விசாரணையினை நடத்தி உண்மையினை வெளிக் கொணர வேண்டுமென்று கருதுகிறது. பொதுத் தகவல் அலுவலர், அத்தகைய தகுதி வாய்ந்த அலுவலர், துணைப் பதிவுத்துறைத் தலைவர், சேலம் மண்டலம் அவர்கள்தான் எனத் தெரிவித்தார். ஆகவே, துணைப் பதிவுத்துறைத் தலைவர், சேலம் மண்டலம் அவர்கள் மேற்சொன்ன, மனுதாரர் 22/05/2026 தேதியிட்டு அளித்துள்ள புகார் குறித்து (நகல் இணைக்கப்பட்டுள்ளது) முழுமையான விசாரணையினை நடத்தி, தனது அறிக்கையினை நேரிலோ அல்லது பிரதிநிதி வாயிலாகவோ 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன மனுதாரரின் புகார் கடிதம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், சென்னை–யிலிருந்து வரப் பெற்றதன் காரணமாக, துணைப் பதிவுத்துறைத் தலைவர், சேலம் மண்டலம் அவர்கள் விசாரணை அறிக்கையின் நகலினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், சென்னை–16-க்கும் அனுப்ப வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16540/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சேலம் மண்டலம். ஒருங்கிணைந்த வளாகம்
Kumaragiri Bypass Road, Ammapet,
சேலம் – 636014.

2.பொதுத் தகவல் அலுவலர்/
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்
293, எம்.கே.என். ரோடு, ஆலந்தூர்
சென்னை-600 016.

3. பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் மேற்கு - 636 012.

**மேல்முறையீட்டாளர்**

Thiru. PUVIYARASAN
No.10/203, Pallipatti Mottur
PALLIPATTI POST - 636 458.
METTUR TALUK, SALEM DISTRICT.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை,
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC